பக்கங்கள்: 14

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 08 சனிக்கிழமை 22.06.2024 கதிர் 227

# பேராயர் மல்கம் ரஞ்சித் மீது மைத்திரி திடீர்க் குற்றச்சாட்டு

## உயிர்த்த ஞாயிறுக்குப் பின் வந்த பணத்துக்கு கணக்குக் கேட்கிறார்

உயிர்த்தஞாயிறுதாக்குதலின் பின்னர் கர்தினால் மல்கம் ரஞ்சித்ஆண்டகைக்குகிடைத்த பணம்பாதிக்கப்பட்டவர்களை முழுமையாக சென்றடைய வில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இதுதொடர்பில் செய்தியாளர்களிடம்பேசியஅவர் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

ஐக்கிய மக்கள் சக்திக்குள் சஜித் பிரேமதாசவுக்கும் இராணுவத்தின் முன்னாள்தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கும் இடையிலான மோதல் உலகம் அறிந்தது. தன்னைக் கட்சியில் இருந்து தூக்கி எறிந்துவிடாமல் வழக்கும் போட்டு வைத்துக்கொண்டிருக்கின்றார் என்றாலும் கட்சிக்குள் இருந்து-கொண்டே குடைச்சல் கொடுப்பதில் பொன்சேகா தீவிரமாக இருக்கிறார். இவருக்குக் குடைச்சல் கொடுக்கும் நோக்கத்துடனேயே படைகளைச் சேர்ந்த -முன்னாள் தளபதிகள், உயர் அதிகாரிகள் எல்லோரையும் கட்சியில் சேர்த்துக்கொண்டு பதவிகளையும்வழங்கிவருகின்றார் சஜித். என்றாலும் பொன்சேகா விலகிப்போபவராகத்தெரியவில்லை. அவர் இரகசியமாக ரணிலுடன் சந்திப்புக்களை நடத்தினாலும் அவருடனும் போய்ச் சேர்வார் போன்று தோன்றவில்லை. இந்த நிலையில் சஜித்திற்கு எதிராக அவர் மீண்டுத் திருவாய் மலர்ந்துள்ளார்.

வடக்குக்கு வந்திருந்த சஜித் பிரேமதாச, அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என்று தெரிவித்திருந்தார். அதாவது காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் ☞ 2

# ஜனாதிபதித் தேர்தல் நிச்சயமாக நடக்கும்

### அனுரகுமார திடமாக நம்பிக்கை

ஜனாதிபதித்தேர்தல் நிச்சயம் நடக்கும், அது பற்றி மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தெஹியத்த கண்டியில் நேற்றையதினம் நடைபெற்ற விவசாயிகள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த மாதம் ☞ 2

# சூழல் சார் சுற்றுலாவை மேம்படுத்த சதுப்பு நிலப் பாதுகாப்பில் அக்கறை

### ஜனாதிபதி தெரிவிப்பு

சதுப்பு நிலங்களைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துவதன்மூலம்சூழல் சார் சுற்றுலாத்துறையை மேம்படுத்த இலங்கை அர்ப்பணிப்புடன்இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

பத்தரமுல்லை வோட்டர்ஸ்எஜ்ஹோட்டலில் நேற்று நடைபெற்ற டபிள்யூ.எல்.ஐ. ஏசியா ☞ 2

### சீரற்ற காலநிலையால்

# சேதமடைந்த வீடுகளுக்கு அதிகபட்ச இழப்பீடு கிட்டும்

சீரற்ற காலநிலை காரணமாக முற்றிலும் சேதமடைந்த வீடுகளுக்கு அதிகபட்ச வரையறைக்கு உட்பட்டு இழப்பீடு வழங்குவதற்கு அல்லது அந்த வீடுகளை மீண்டும் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்குமாறுஜனாதிபதிரணில் விக்ரமசிங்க பணிப்புரை வழங்கியுள்ளதாக தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் ☞ 8

# மின்சாரக் கட்டணம் ஜூலை 15 குறைப்பு

மின் கட்டண திருத்த யோசனை தொடர்பான இறுதித் தீர்மானம் ஜூலை 15 ஆம் திகதி அறிவிக்கப்படும் என பொது பயன்பாடுகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது. இந்தத் திருத்தத்தில் கட்டணங்களைக் கணிசமாகக் குறைப்பதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பானமக்கள்கருத்துகளை பெற்றுக்கொள்ளும்நடவடிக்கைஜூலை 8நிறைவடையுமெனவும்ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், ஜூன் 9 வாய்மூல கருத்துகள் பெற்றுக்கொள்ளப்படும் என பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபை அண்மையில்தனதுமின்கட்டணதிருத்த யோசனையை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம்சமர்ப்பித்திருந்தது.

# சவூதி அரேபியாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

### முதலீடுகளை ஈர்ப்பதற்காக

இலங்கைக்கும் சவுதி அரேபியாவிற்கும் இடையேயானமுதலீட்டு நடவடிக்கைகளை மேம்படுத்தும்நோக்கில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தஒப்பந்தத்திற்கு அமைய நேரடி முதலீட்டை ஈர்க்கவும், முதலீட்டுசூழலைமேம் படுத்தவும் முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் சவுதி அரேபியாவின் ரியாத்தில் நடைபெற்ற உலக பொருளாதார மன்றத்தின் விசேட கூட்டத்தின் போது, புரிந்துணர்வுஒப்பந்தம் குறித்து உறுதியான தீர்மானம் ஒன்று எட்டப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தினை அமுல்படுத்தும் போது, முதலீடு குறித்து முக்கிய கொள்கை மற்றும் சட்ட சீர்திருத்தங்களை செயற்படுத்துதல், உட்கட்டமைப்பை மேம்படுத்தல் மற்றும் முதலீட்டினை திறமையான செயல் முறைகளுக்கு அமைய முன்னெடுக்க முடியும் என நம்பிக்கை ☞ 8

# எலிக் காய்ச்சலால் 5,000 பேர் கடந்த 10 மாதங்களில் பாதிப்பு

இவ்வாண்டின் கடந்த மாதங்களில் எலிக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட 5000 பேர் நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி, கேகாலை, காலி, களுத்துறை, மாத்தறை, மொனராகலை, குருநாகல் மாவட்டங்களில் அதிகளவான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த நோயினால் ஆண்களே அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனினும், பெண்கள் மத்தியிலும் நோய்பரவல்அதிகரிக்க ஆரம்பித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்பு பிரிவின் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் துலானி தாபரே தெரிவித்தார்.

# இலங்கை கடல் எல்லை பகுதியில் இந்திய இணை அமைச்சர் ஆய்வு

இலங்கை இந்திய எல்லைப்பகுதியை பாதுகாப்புத்துறைமத்திய இணைஅமைச்சர்சஞ்சய் செத் ஆராய்ந்துள்ளார்.

தனுஷ்கோடிஅரிச்சல் முனைக் கடற்கரையிலிருந்து நீரிலும் நிலத்திலும்செல்லக்கூடிய ஹோவர்கிராப்ட்கப்பலின் மூ-லம் பயணம் செய்து இந்திய இலங்கை எல்லைப்பகுதியைஅவர் ஆராய்ந்துள்ளார்.

இந்தியக் கடலோரக் காவற்படை அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் நடைபெற்றஇந்தஇணை அமைச்சரின் களப் பயணத்தின் போது தனுஷ்கோடி ☞ 8

# ஸ்மார்ட் வகுப்பறை திட்டத்தால் வெறுப்பை உமிழும் கட்சிகள்

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

பிரபஞ்சம், மூச்சுத் திட்டங்களைமுன்னெடுத்துவரும் போது, நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் கும்பலாகவும், தனித்தனியாகவும், தன்னை அவமானப் படுத்தி, தன் மீது பொறாமை கொண்டு, தன் மீது வெறுப்பை வெளிப்படுத்தி,கோபத்தை வெளிப்படுத்தி, பகைமை காட்டி வருகின்றனர்.

வங்குரோத்து நிலையில் உள்ள நாட்டு மக்களுக்கும், பிள்ளைகளுக்கும் வளங்களைப் பகிர்ந்தளிப்பதற்கு எதிரானவர்களே இவைஅனைத்தையும் மேற்கொண்டு வருகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப ☞ 2

# ஒன்றிணைந்த கல்வி சாரா ஊழியர்கள் தொடர்ந்து 3 நாள்கள் பணிப் புறக்கணிப்பு

தொடர்ந்து மூன்று நாள்கள் பணிப் புறக்கணிப்புப்போராட்டத்தை முன்னெடுப்பதற்கு அகில இலங்கை ஒன்றிணைந்த கல்வி சாராஊழியர்கள்சங்கம் தீர்மானித்துள்ளது.

அரச பாடசாலைகளில் உள்ள கல்வி சாரா ஊழியர்களின் தொழிற்சங்கபிரச்சினைகளுக்கு, ஆளும் தரப்பு இதுவரைதீர்வுவழங்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த சங்கம் பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ளவுள்ளது.

ஜூன்24, 25மற்றும் 26 ஆம் திகதிகளில் தொழிற்சங்கப் போராட்டத்தைமுன்னெடுக்கவுள்ளதாக அகில இலங்கை ஒன்றிணைந்த கல்வி சாராஊழியர்கள் சங்கத்தின் தலைவர் குமுது கட்டபொலுகே தெரிவித்துள்ளார்.இதன்போதும் எவ்வித தீர்வுகளும் முன்வைக்கப்படாவிட்டால் எதிர்காலத்தில் தொடர் தொழிற்சங்கப் போராட்டத்தைமுன்னெடுக்கவும் தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கை பொலிஸாருக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி

### இந்தியா வழங்குகின்றது

இலங்கைபொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சிகளை மேற்கொள்ள இந்திய உயர் ஆணையரகம் ஏற்பாடு செய்துள்ளது.

2024ஆம்ஆண்டின் ஆரம்பித்திலிருந்து ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அரசமைப்பில் என்ன கூறப்பட்டிருக்கின்றதோ அதனை அப்படியே நடைமுறைப்படுத்துவார் என்று கூறியிருந்தார். ஆனால், பொலிஸ் அதிகாரம்என்பதுசமூகக்காவலர்கள் என்ற அளவில் வழங்கப்படுவதை மட்டுமே சஜித் குறிப்பிட்டார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் அதற்கு கொழும்பில் செய்தியாளர்கள் மத்தியில் விளக்கமளித்தார்.

இன்றுவரைக்கும் அதற்கு மறுப்புத் தெரிவித்து சஜித் எதுவும் சொல்லவில்லை. சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களின் வாக்குகளுக்காக இப்படி வாக்குறுதிகளை வழங்கவிட்டு ஏமாற்றுவது வாடிக்கை என்பது தமிழர்களிடம் ஆழமாகப் பதிந்திருக்கும் நிலையிலும் ரஹ்மானின் கருத்துக்களை மறுத்து முழுமையான பொலிஸ் அதிகாரம் வழங்கப்படும் என்று சஜித் கூறவேயில்லை.

இதையொட்டி ரணிலைப் பற்றி ஒரு தகவலையும் இங்கே சொல்லவேண்டும். மாகாணங்களுக்கு இந்தப் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுக்கொண்டதும் முன்னேற்றகரமான சில பல நடவடிக்கைகள் வரைகூடச் சென்றார்கள். அதாவது, பொலிஸ் அதிகாரங்களைவழங்குவதற்கான முதல்படியாக பொலிஸ் ஆயுதப் படையினரை 9மாகாணங்களிலும் பிரித்து நிறுத்துவதற்கு வேண்டிய உத்தரவுகளைஅவர்பிறப்பிருந்தார். ஆனால் பின்னர் என்ன நடந்ததோ தெரியாது, அந்த முயற்சிகள் அனைத்திலிருந்தும் அவர் பின்வாங்கிவிட்டார். இப்போது காணி, பொலிஸ் அதிகாரங்கள் அற்ற 13 மைனஸ் பற்றித்தான் அவர் பேசுகின்றார்.

இந்த நிலையில்தான் சஜித்தின் பொலிஸ் அதிகாரங்கள் குறித்து சிங்கள மக்களுக்கு ரஹ்மான் ஒரு கருத்தும் சஜித் வடக்கு தமிழ் மக்களுக்கு ஒரு கருத்துமாகக் கூறிவருகின்றார். அப்படியிருந்தும் 13ஐ நிறைவேற்றுவேன் என்று கூறுபவர்களுக்குச்சிங்கள மக்கள் வாக்களிக்கக்கூடாது என்று சரத் பொன்சேகா கூறியிருக்கிறார்.

நாட்டை ஐக்கியப்படுத்துவதற்காகவே படையினர் உயிர்த் தியாகம் செய்தனர். எனவே, 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவேன் எனக் கூறும் ஜனாதிபதிவேட்பாளர்களுக்குவடக்கு மற்றும்தெற்கு மக்கள் வாக்களிக்கக் கூடாது என்று நாடாளுமன்றத்தில் ஆற்றியஉரையில்சரத்பொன்சேகா தெரிவித்தார். 13ஆவது திருத்தச் சட்டம் என்பது அப்பன் வீட்டுச் சொத்து அல்ல எனவும் அவர் சாடினார்.

அத்துடன், பெயர் குறிப்பிடாது மறைமுகமாக சஜித் பிரேமதாஸவையும் சரமாரியாகச் சாடினார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு எதிரணி பிரதம கொறடாவிடம் நேரம் கோரி இருந்தேன். எனக்கு நேரம் ஒதுக்கவேண்டாம்எனஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்று அவர் பதிலளித்தார். அத்துடன், ஜனாதிபதித் தேர்தலின்போது சஜித்துக்குச் சார்பாக வேலை செய்வீர்களா எனவும் வினவினார்.

இறுதியில் எனக்கு நேரம் வழங்கவில்லை. எனினும், ஆளுங்கட்சியிடம்பேசிநேரத்தைப் பெற்றுக்கொண்டேன். நாம் மக்களுக்குச் சாராயம் கொடுத்து அரசியல் நடத்துவதில்லை. ஊழல், மோசடிகளில் ஈடுபடுவதும் கிடையாது. கொழும்பில் உள்ள கசினோக்காரர்களிடம் காசு வாங்கி பாடசாலைகளுக்கும், வைத்தியசாலைகளுக்கும் பொருட்களை வழங்குவதும் கிடையாது. இப்படிசெய்பவர்கள்தான் நாட்டின்தலைவராகப்பார்க்கின்றனர். கட்சித்தலைவர் என்பதற்காக ஆட்சி அதிகாரத்தை வழங்கும் முடிவை எடுத்தால் அது நாட்டுக்கே பாதகமாக அமையும்.

தந்தை ஜனாதிபதியாக இருந்தார் என்பதற்காக மகன்களை ஜனாதிபதியாக்க முடியாது. இது தொடர்பில் மக்கள் சிந்தனையுடன் செயற்படவேண்டும். பொருட்களைப் பகிர்பவர்களை அல்ல சிறந்த தலைவரையே மக்கள் தெரிவு செய்யவேண்டும். ஜனாதிபதி ஆகவேண்டும் என்ற கனவில் இருப்பவர்கள், வடக்குக்குச் செல்கின்றனர். 13வழங்கப்படும்என உறுதியளிக்கின்றனர். தெற்கில்யார் எதிர்த்தாலும் 13 வழங்கப்படுமாம். அப்படி வழங்குவதற்கு 13 என்ன அப்பன் வீட்டுச் சொத்தா?

நாட்டை ஐக்கியப்படுத்துவதற்காகவே படையினர் உயிர்த் தியாகம் செய்தனர். எனவே, வடக்கும், தெற்கும் என அனைத்துப் பகுதியிலும் உள்ள மக்கள்ஐக்கியமாகவாழவேண்டும். தெற்கில் உள்ளவர்கள் வடக்கில் உள்ளவாக்குகளுக்காக இங்கிருந்து சென்று உறுதியளிக்கின்றனர்.

வடக்கில் உள்ள சில அரசியல்வாதிகள், இதைப் பெற்றுக்கொடுப்போம் எனக்கூறி நாடாளுமன்றம் வருகின்றனர். 13ஐ வழங்குவோம் என வாக்குக் கேட்கும்வேட்பாளர்களுக்கு தெற்கு மக்களும், வடக்கு மக்களும் வாக்களிக்கக்கூடாது என்றார் சரத் பொன்சேகா.

இதற்குப் பதிலளித்திருக்கும் முஜிபுர்ரஹ்மான், பொன்சேகாவுக்கு ஜனாதிபதி ஆகவேண்டும் என்கிற கனவு, ஐக்கிய மக்கள் சக்தியில் அதற்கு இடமில்லை என்பது தெரிந்ததும் சஜித் பிரேமதாஸவைத்தாக்குகிறார்என்று தெரிவித்திருக்கிறார். மொத்தத்தில் இவர்களின் சண்டையில் தமிழர்களின் தலைகளைத்தான் உருட்டுகிறார்கள்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## பேராயர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்றதன் பின்னர் உள்நாட்டில் தொழிலதிபர்கள் மற்றும் தனவந்தர்கள் மூலம் பெருமளவிலான பணம் பேராயருக்கு வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளைச் செய்வதற்காக அந்த நிதி வழங்கப்பட்டது.

அதேபோன்று, சர்தேச அமைப்புக்கள் பலவும் நிதியை வழங்கின. ஆனால் அந்தப் பணம் பாதிக்கப்பட்டமக்களைமுழுமையாக சென்றடையவில்லை. ஆகவே பேராயர் தனக்கு கிடைத்தன மொத்த நிதி எவ்வளவு. அதில் எவ்வளவுபாதிக்கப்பட்டமக்களுக்கு வழங்கப்பட்டது என்பதைத் தெளிவுபடுத்தவேண்டும். வெளிப்படைத்தன்மையுடன் அதனை அவர் பகிரங்கப்படுத்த வேண்டும் என்றார்.

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமார்60க்கும்மேற்பட்டஇலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்கள், உயர் அதிகாரிகள் மற்றும் மூத்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இந்த பயிற்சிகளின் மூலம் பயனடைந்துள்ளனர்.

இந்தப்பயிற்சி முறைகளாவன இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புமற்றும் 'இலங்கைக்கு உதவி' திட்டத்தின் கீழ் இந்திய ஆளும் தரப்பால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜூன் 18 இந்தியாவின் புதுடில்லியில் ஆரம்பிக்கப்பட்டஇரண்டுவாரபாடத் திட்டத்திற்குஇலங்கையிலிருந்து23 மூத்த பொலிஸ் உத்தியோகத்தர் சென்றிருந்தனர்.

மேலும், இந்த ஆண்டில் 130க்கும் மேற்பட்ட இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்கள் இந்தியாவில் பயிற்சி பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஸ்மார்ட்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலைத்திட்டத்தின் கீழ், 247 ஆவது கட்டமாக 1,177,000 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், குருநாகல், ஹிரியால நிகதலுபொத, தித்தவெல்கால அல்-ஹிக்மா முஸ்லிம் மகா வித்தியாலயத்துக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இதன்போது, பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினருக்கு ஒரு இலட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டது. நிகழ்வில் உரையாற்றிய எதிர்க் கட்சித் தலைவர் மேலும் தெரிவித்ததாவது:

வளங்கள் இல்லாத இடத்துக்கு வளங்களை வழங்கும்போது, குறைபாடுகளுக்குத் தீர்வுகளைக் காணும்போது, அனைவரும்சேர்ந்து கொண்டு என் மீது சேறு பூசும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். அவர்கள்அனைவரும் ஒன்று சேர்ந்து என்னையும் ஐக்கிய மக்கள் சக்தியையும் தூரப்படுத்தி, மட்டம்தட்ட முற்படுகின்றனர். அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தாலும் 220 இலட்சம் மக்களும்ஐக்கியமக்கள்சக்தியுடனே இருக்கின்றனர்.

இந்த சேறுபூசும் நடவடிக்கை 10096 பாடசாலைகளில் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் நாற்பத்தொரு இலட்சம் பிள்ளைகளுக்கும் இழைக்கப்படும் அநீதியாகும். தம்முடன் இருக்கும் பிரச்சினைகளுக்கு பாடசாலைப் பிள்ளைகளைப் பழிவாங்க வேண்டாம் என எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக்கொண்டார்.

ஐக்கிய மக்கள் சக்தி அரசில் சகல பாடசாலை மாணவர்களுக்கும் இலவச மதிய உணவு வழங்கப்படுவதற்கு,விவசாயிகளுக்கு உர மானியம் வழங்கப்படுவதற்கு, பயிர் கொள்முதல் திட்டங்கள் உருவாக்கப்படும் போது, புதிய தொழில்கள் உருவாக்கப்பட்டு புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப் படும்போது, பொருளாதாரம் வளர்ச்சியடை நடவடிக்கை எடுக்கும்போது பொறாமைத்தன கட்சி அரசியல் சகலதையும் எதிர்த்து வருகிறது. வங்குரோத்து நிலையில்உள்ளநாட்டால்இவ்வாறு முன்னோக்கிப் பயணிக்க முடியாது.

உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகள் ஸ்மார்ட் கல்வியை நடைமுறைப்படுத்தும்போது, நமது நாட்டில் பழங்காலக் கல்வி முறையே முன்னெடுக்கப்பட்டு வருகிறது. எனவே, இதனை மாற்றியமைத்துஸ்மார்ட்கல்வியைப் போன்று ஆங்கிலக் கல்வியும் முன்னெடுக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்

## சூழல் சார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓஸானியா (WLI Asia Oceania 2024) நிறைவு விழாவில் கலந்தகொண்டு உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவரது உரையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

சர்வதேச சதுப்பு நிலங்கள் ஒன்றியத்தின் முதல் மாநாட்டை இலங்கையில் நடத்தக் கிடைத்தமையை அதிஷ்டமாகக் கருதுகிறேன். சதுப்பு நிலங்கள், யானைகள் மற்றும் பிற விலங்குகள் இன்று பூமியில் அழிந்து வருகின்றன.

அபிவிருத்தி மற்றும் மக்கள் தொகை அதிகரிப்பால் இன்று நாடு முழுவதும் சதுப்புநிலங்கள் குறைந்து வருகின்றன. எனவே இவற்றைப் பாதுகாப்பதில் உடனடியாகக்கவனம்செலுத்தவேண்டும். அதற்காகஅனைவரும்பொதுவான இலக்குடன் ஒன்றாகப் பணியாற்ற வேண்டும்.

சுமார் 500 ஆண்டுகள் பின்நோக்கிப் பார்த்தால், இன்று நாம் இருக்கும் இந்த இடமும் அதைச்சுற்றியுள்ளபகுதியும்சதுப்பு நிலங்களால் சூழப்பட்டிருந்தது. ஆனால் படிப்படியாக அது எவ்வாறு நிரப்பப்பட்டு வந்தது என்பதைக் கண்டோம். இந்தச் சதுப்பு நிலங்களை நாம் பாதுகாக்கவேண்டும். தற்போதைய ஆளும்தரப்புஅதற்குமுன்னுரிமை அளித்து வருகிறது. அதில் இந்த தியசரு பூங்காவும் ஒன்று என்று குறிப்பிடலாம்.

தற்போது தென் மாகாணத்தில் 1000 ஏக்கருக்கும் அதிகமான சதுப்புநிலத்தை சுற்றுலாத் தலமாக மேம்படுத்த திட்டமிட்டுள்ளோம். எதிர்காலத்தில்அக்குரலபிரதேசத்தில் உள்ள சதுப்பு நிலங்களின் மற்றுமொரு பகுதியைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களின் கீழ் இந்த நாட்டின் சதுப்பு நிலக் கட்டமைப்பு பாதுகாக்கப்படும் என நான் நம்புகிறேன். இதன்மூலம், நாட்டில் சூழல்நேய சுற்றுலா வர்த்தகம் உருவாக்கப்படும்.

ஹோர்டன் பிளேஸை அண்மித்து சுற்றுலா வலயம் ஒன்றை உருவாக்க நாம் மேலும் 1000 ஏக்கர்களை ஒதுக்கி உள்ளோம். எனவே, சதுப்பு நிலப் பாதுகாப்பில் கவனம் செலுத்துவதன் மூலம் சூழல் சார் சுற்றுலாத் துறையை மேம்படுத்த இலங்கை உறுதிபூண்டுள்ளது. சூழல் கட்டமைப்பு மற்றும் கடற்தாவரங்களைப் பாதுகாப்பதற்கானவெப்பமண்டலமுயற்சிகளை நாங்கள் ஊக்குவிக்கிறோம். குறிப்பாக காலநிலை மாற்றத்திற்கு எதிரான போராட்டத்தில் இது ஒரு முக்கியமான காரணியாகிறது.

அமேசான் சுற்றுச்சூழல் அமைப்பு இன்று மறைந்து வருகிறது. இவற்றை நாம் பாதுகாக்கவேண்டும். சதுப்புநிலங்கள், காடுகள், புல்வெளிகள், இவை அனைத்தும் பாதுகாக்கப் படவேண்டும். வர்த்தகத்திற்காக அல்ல, சுற்றுச்சூழல் அமைப்பின் ஒரு பகுதியாக இது எவ்வளவு வர்த்தக மதிப்பைக் கொண்டிருக்கக்கூடும் என்பதை நாம் பார்க்கவேண்டும். ஆனால் இதற்கான நிதி வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அந்தப் பணம் தற்போது பெரும்பாலும் உக்ரைன் அல்லது காசா பகுதிக்கு செல்கிறது. ஆனால் அது அத்துடன் முடிவதில்லை. எனவே நம்மை நாமே கவனித்துக் கொள்ள வேண்டும்.

அதன்போது, சுற்றாடல் தொடர்பான வர்த்தக திட்டங்களில் கவனம் செலுத்த வேண்டும். இந்து சமுத்திரத்தில் கார்பன் உறிஞ்சும் பகுதியாக இந்தச் சதுப்பு நிலங்கள் வகிக்கக்கூடிய பங்கையும்நாங்கள் பார்க்கிறோம். இந்தப் பகுதிகளை சாதாரண அபிவிருத்திற்காக அல்லாமல் சுற்றாடல் பாதுகாப்பிற்காக வணிகமயமாக்குவது எப்படி என்பதை நாம் கண்டறிய வேண்டும். பசுமை நிதியியல் மற்றும் பசுமைப் பொருளாதாரத்திற்கு அவசியமான நிதியைப் பெற்றுக்கொள்வது குறித்தும் நாம் கவனம் செலுத்தவேண்டும்.

வெப்பமண்டலப் பகுதி கடுமையான சுற்றுச்சூழல் அச்சுறுத்தலில் உள்ளது. அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் வெளிநாடுகளில்இருந்துகிடைக்கும் நிதியைஎதிர்பார்த்துப்பயனில்லை. எனவே, சுற்றுச்சூழலையும்வெப்ப மண்டலத்தையும் பாதுகாக்க வர்த்தக ரீதியாக சாத்தியமான திட்டங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

இலங்கை ஆளும் தரப்பு தற்போது சர்வதேச காலநிலை மாற்ற பல்கலைக்கழகத்தை நிறுவுவது தொடர்பான சட்டத்தை உருவாக்கி வருகிறது. ஆசியாவிலேயேமுதன்முறையாக இதுபோன்ற பல்கலைக்கழகம் உருவாக்கப்படுகின்றது. மேலும் இது உலகின் பிற காலநிலை மாற்ற மையங்களுடன்இணைக்கப்படும்.

காலநிலைமாற்றக்கல்விமற்றும் ஆராய்ச்சி வலையமைப்பிற்கான மையமாகஇந்தப்பல்கலைக்கழகம் செயல்படும், மேலும் எவருக்கும் குறுகிய கால பயிற்சி அல்லது பட்டப் பின் படிப்புகளுக்கான வாய்ப்புகளை இது வழங்கும். எதிர்வரும் ஆண்டுகளில் இந்த நடவடிக்கைகளை நாங்கள் செயல்படுத்த எதிர்பார்க்கின்றோம் என்பதையும் குறிப்பிட்டு, இந்த மாநாட்டை இன்று ஏற்பாடு செய்த அனைவருக்கும் நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

## ஜனாதிபதித் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவடைகின்றது. அதனையடுத்து இரண்டு மாதங்களாகின்றபோது ஜனாதிபதி தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படும். தேர்தல் நடக்குமா இல்லையா என்று சந்தேகம் உள்ளதா? சந்தேகப்பட வேண்டாம். தேர்தல் நிச்சயம் நடக்கும்.

தேர்தல்நடைபெறாததுபோன்று ஆளும்தரப்பினர் கருத்துக்களை வெளியிடுகின்றார்கள். அது அச்சத்தின் காரணமாக வெளிவருகின்ற கருத்துக்களாகும். குறிப்பாக தோல்வி அச்சத்தின் காரணமாக வருகின்ற கருத்துக்கள்.

தேர்தல் உரிய காலத்தில் நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். அதனால் நீங்கள் அச்சம் கொள்ள வேண்டிய அவசியமில்லை. இத்தனை நாட்களாக அமைக்கப்பட்ட ஆளும்தரப்புக்கள் மக்கள் சார்பானவை அல்ல.

தற்போதைய ஆட்சியாளர்கள் பொதுமக்கள் மீது வரியைச் சுமத்துகின்றார்கள். எனினும் தமது நண்பர்களுக்கு வரியை விலக்குகின்றார்கள். சாராய முதலாளிமார்கள் வங்கிகளில் கடன்களைப் பெற்றுள்ளனர். ஆனால் அவர்கள் அதனை முழுமையாகத் திருப்பிச் செலுத்தவில்லை. அந்தக்கடன்கள் அவ்வாறே உள்ளன. நீங்கள் கடன்களைப் பெற்று மீளச் செலுத்தாது விட்டால் வங்கிகள் எவ்விதமாக நடந்துகொள்கின்றன என்பதை அறிவீர்கள். ஆனால் பெரியவர்களை அவ்வாறு நடத்துவதில்லை.

அதேபோன்றுதான் போதைப் பொருட்கள்கைப்பற்றப்படுகின்றன. அதனுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்படுகின்றார்கள். ஆனால் 300கோடி பெறுமதியான போதைப்பொருட்களை சிறியவர்களோ சாதாரணமா னவர்களோ கொண்டுவருவது கிடையாது. அதனைக்கொண்டுவருவதுபெரும் முதலாளிகள். அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படப்போவதில்லை இந்த நிலைமையை மாற்ற வேண்டும்.

தற்போது வஜிர அபேவர்த்தன ரணில்விக்கிரமசிங்கவுக்குமேலும் பத்து வருடங்களை வழங்க வேண்டும் என்கிறார். அவ்வாறு வழங்கினால் சாதாரண கிராம மக்களின் நிலைமை எவ்வாறு இருக்கும். கிராமத்தின்வறுமையை ஒழிக்கும் செயற்றிடத்தினை நான் முன்னெடுக்கவுள்ளேன். அதுதான் எனது முதற்பணியாகவுள்ளது

காலைக்கதிர்
Kalaikkathir

# பெரிய மிஹிந்தலை திட்டம் இந்த ஆண்டு ஆரம்பமாம்

## ஒதுக்கப்பட்ட தொகை 20 கோடி ரூபா

(முனீரா அபூபக்கர்)

பெரிய மிஹிந்தலை திட்டம் இந்த வருடம் ஆரம்பிக்கப்படும். இத்திட்டத்திற்காக 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், பெரிய மிஹிந்தலை திட்டத்தின் எஞ்சிய அபிவிருத்திப் பணிகள் அரச மற்றும் தனியார் பங்களிப்பைப் பயன்படுத்தி தனியார் துறையின் நிதி பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட உள்ளது.

நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் நகர மற்றும் வீடமைப்பு அமைச்சின் கூட்டுத் திட்டமாக பெரிய மிஹிந்தலை திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அறிவுறுத்தல்கள் கிடைத்துள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடமத்திய மாகாண பணிப்பாளர் எச்.டபிள்யூ. சோமரத்ன தெரிவித்தார். திட்டத்திற்கான பரிந்துரைகளைப் பெறுவதற்காக, வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், புகையிரத திணைக்களம், வனப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் தொல்பொருளியல் திணைக்களம் ஆகிய நிறுவனங்களின் பொறுப்புகளைக் கண்டறிந்து திட்டத்திற்கான பரிந்துரைகளைப் பெறுவதற்கான சாத்தியக்கூறு ஆய்வை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

விசேடமாக அநுராதபுர யாத்திரை காலங்களில் மாத்திரம் செயற்படும் மிஹிந்தலை புகையிரதத்திற்கு அனைத்து காலங்களிலும் முக்கியத்துவம் மற்றும் செயற்பாடுகளை வழங்குவதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் பணிப்பாளர் தெரிவித்தார். இந்த ரயில் பாதை திருகோணமலை வரை அபிவிருத்தி செய்யப்படுவதோடு, அதே நேரத்தில் போக்குவரத்து பொருளாதாரம் மற்றும் கொள்கலன்கள் மற்றும் களஞ்சியசாலை கொண்ட ஒரு பெரிய நகரமும் உருவாக்கப்படும். ரயில் நிலையத்தை ஒட்டி ஒரு வர்த்தக நிலையம் அமைக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வர்த்தக நிலையத்தில் பூங்காக்கள், சுகாதார நிலையங்கள், ஹோட்டல்கள், வர்த்தக நிலையங்கள், புகையிரத முனையங்கள், இடைப்பட்ட கொள்கலன் முனையம், உணவு பதப்படுத்தும் வலயம் போன்ற வசதிகளை ஏற்படுத்த கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தற்போது, இலங்கைக்கு பொருள்களை இறக்குமதி செய்யும் பாரிய வர்த்தக நிறுவனங்கள் மற்றும் மிஹிந்தலை நகரில் உள்ளூரில் பிராந்திய விநியோக நிலையத்தை நிறுவுவதன் முக்கியத்துவம் குறித்து ஆரம்பகட்ட விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தால் முழு செயற்திட்டத்தின் ஆரம்ப சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அதற்கான அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

பௌத்த பக்தர்கள் வழிபட வருகை தரும் மிஹிந்தலை சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் நகரமாகவும் உள்ளது. அதற்கான பொருளாதார பெறுமதியை இனங்கண்டு பெரிய மிஹிந்தலை திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என பணிப்பாளர் தெரிவித்தார். புண்ணிய பூமி தொடர்பான உள்கட்டமைப்பை மேம்படுத்துவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

அநுராதபுரம் புண்ணிய பூமியை அண்மித்த பகுதிகளில் நகர அபிவிருத்தி அதிகாரசபை பல விசேட அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. மூலோபாய நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இது நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்த அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அனுராதபுரம் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தித் திட்டம் இலங்கை அரசாங்கத்திற்கும் பிரான்ஸ் நிறுவனத்திற்கும் இடையிலான பங்காளித்துவத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. அனுராதபுரத்தின் இயற்கை பாரம்பரியத்தை பாதுகாக்கும் அதே வேளையில் அநுராதபுர நகரின் புனித மற்றும் நவீன பகுதிகளுக்கு இடையில் அபிவிருத்திக்கான சமச்சீர் முறையை பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை 62.4 மில்லியன் யூரோக்கள். இத்திட்டத்தின் கீழ் 11 துணைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இதில் 10 திட்டங்கள் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன.

அநுராதபுரம் தூபாராமயவில் இருந்து ருவன்வெலி சாய வரையிலான வீதி மற்றும் ருவன்வெலி சாயேயின் உள்நுழையும் வீதி ஆகியவற்றிலும் இத்திட்டத்தின் கீழ் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தூபாராம முதல் ருவன்வெலி சாய வரையிலான வீதி கற்களை அகற்றி, குடிநீர் வசதிகளை ஏற்படுத்தி, பக்தர்கள் இளைப்பாறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதேவேளை, ருவன்வெலி சாயவிற்கு செல்லும் பிரதான வீதியும் அபிவிருத்தி செய்யப்பட்டது. ருவன்வெலி சாய புண்ணிய பூமிக்கு அருகாமையில் நுழைவு மற்றும் வெளியேறும் கதவுகளை உருவாக்குதல், பாதுகாப்பிற்காக புதிய காவலரண்களை உருவாக்குதல் மற்றும் தானியங்கி தெளிப்பான்கள் பொருத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அனுராதபுரம் புண்ணிய நகரில், ஸ்ரீ மஹா போதி கிழக்கு வாகனம் நிறுத்தும் இடம் மற்றும் தெற்கு வாகனம் நிறுத்தும் இடம் , மிரிசவடிய வாகனம் நிறுத்தும் இடம் , லங்காராமய வாகனம் நிறுத்தும் இடம் ஆகியவை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. கார் பார்க்கிங்குகள் நவீன வசதிகளுடன் பொருத்தப்பட்டுள்ளன, அவை நிலையான வடிகால் அமைப்புகள், திறமையான மைக்ரோ-நீர் விநியோக பாதைகள், புல்வெளிகள் மற்றும் டிக்கெட் கவுன்ட்டர்களுடன் கூடிய தானியங்கி வாயில்கள் போன்ற வடிவமைப்பு அம்சங்களை உள்ளடக்கியது. தொல்பொருளியல் திணைக்களத்தின் மேற்பார்வையில் பல்வேறு வகையான பெயர் பலகைகள் நிறுவும் பணி நிறைவு பெற்றது. இந்த தளத்தை அடையாளம் கண்டு, அதன் தொல்பொருள் அம்சங்களின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு இந்த முக்கிய அம்சங்களை அடையாளம் காண உதவுவது இதன் நோக்கமாகும்.

1795.30 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட அனுராதபுரம் தெற்கு பல்வகை போக்குவரத்து நிலையத்தின் நிர்மாணப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்த நிலையம் உணவுசாலை, தங்கும் விடுதிகள் மற்றும் நவீன வசதிகளுடன் உள்ளது. அநுராதபுரத்திற்கு வரும் குறுகிய மற்றும் நீண்ட தூர பேருந்து சேவைகள் மற்றும் புகையிரத சேவைகளின் கூட்டு ஏற்பாட்டை இந்த பல்வகை போக்குவரத்து நிலையத்தில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அனுராதபுரம் தெற்கு பல்வகை போக்குவரத்து நிலையத்தின் நிர்மாணப் பணிகள் இவ்வருடத்தில் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. (05)

# இராமகிருஷ்ண மிஷன் ஏற்பாட்டில் கல்லடியில் சர்வதேச யோகா தினம்



(வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் விவேகானந்தா மனித வள மேம்பாட்டு நிலையத்தின் ஏற்பாட்டில் சர்வதேச யோகா தினம் வெள்ளிக்கிழமை காலை கல்லடி சிவானந்த வித்தியாலய மைதானத்தில் சிறப்பாக அனுஸ்டிக்கப்பட்டது.





மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் உதவி பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுரர்ச்சிதானந்தா ஜீ மகராஜ் ஆகியோர் முன்னிலையில் இந் நிகழ்வு காலை 6 மணி முதல் நடைபெற்றது.

பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்( காணி) திருமதி நவரூபரஞ்சனி முகுந்தன் கலந்து சிறப்பித்தார் .

கௌரவ அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா.முரளீஸ்வரன் கலந்து சிறப்பித்தார்.

இந்த யோகா பயிற்சியை பயிற்றுவிப்பாளர்களான சிவலிங்கம் ஸ்ரீதரன், அழகுராஜா ஜெயகரன் ஆகியோர் நடத்தினர்.

சுமார் 250 பேர் யோகா பயிற்சியை காலை 6 மணி முதல் ஏழு மணி வரை சூரிய ஒளியில் பெற்றார்கள். (05)





# கார்மேல் பற்றிமா அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு மருத்துவ முகாம்








(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையின் அதிபர் ஆசிரியர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கான மருத்துவ முகாம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

கல்முனை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் எஸ்.சந்திரசேன திட்டமிடல் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் மற்றும் கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள் உள்ளிட்ட குழுவினர்கள் மருத்துவ முகாமை நடத்தினர்.

இதன் போது பாடசாலையில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட சுமார் 80 பேருக்கான தொற்றாநோய் நிலை பரிசோதனைகள் மற்றும் பற்சுகாதார பரிசோதனைகள் செய்யப்பட்டது.

மேலும் அவர்களுக்கான சுகாதார போதனைகள் மற்றும் விழிப்புணர்வுகளும் வழங்கப் பட்டன.(05)



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உடனடியத் தீர்வு அவசியம்

பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்களின் போராட்டமே இன்னும் ஒரு முடிவுக்கு வராத நிலையில் தொடர்ந்து மூன்று நாள்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை அகில இலங்கை ஒன்றிணைந்த கல்விசாரா ஊழியர்கள் சங்கம் அறிவித்துள்ளது. இது போராட்டங்கள் மீண்டுத் தீவிரப்படுத்தும் ஒரு நிலையைநோக்கிநாடுநகர்வதைக்குறிக்கின்றது.

அரச பாடசாலைகளில் உள்ள கல்வி சாரா ஊழியர்களின்தொழிற்சங்கபிரச்சினைகளுக்கு, ஆளும் தரப்பு இதுவரை தீர்வு வழங்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தச் சங்கம் இந்த அடையாளப்பணிப்புறக்கணிப்பைஅறிவித்துள்ளது.

ஜுன் 24, 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அகில இலங்கை ஒன்றிணைந்த கல்விசாரா ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் குமுது கட்டபொலுகே தெரிவித்துள்ளார்.

தமது போராட்டத்திற்கும் எவ்வித தீர்வுகளும் முன்வைக்கப்படாவிட்டால் எதிர்காலத்தில் தொடர் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பலமாதங்களாகத் தொடரும் பல்கலைக்கழகப் போராட்டத்திற்கே இதுவரையில் தீர்வு எதனையும் வழங்காத ஆளும் தரப்பினர் பாடசாலைக் கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு மட்டும்உடனடியாகத்தீர்வுகளைமுன்வைத்துவிடுவர் என்று எதிர்பார்க்க முடியாது.

ஏற்கனவே பல்கலைக்கழகங்களில் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இனிவரும் நாள்களில் பாடசாலைக் கல்வியும் பாதிப்புக்களை எதிர்நோக்கும் நிலை ஏற்படுமோ என்கிற அச்சம் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. அரச பாடசாலைகள், அரச பல்கலைக்கழங்களைத் தவிர்த்து தனியார் கல்வி நிறுவனங்களை ஊக்குவிப்பதில் அதிக கவனம், சிரத்தை கொண்டுள்ள தற்போதைய ஆளும் தரப்பு அதற்காகவே அரச கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதைக் கண்டுகொள்ளாமல் இருக்கின்றனவோ என்கிற சந்தேகத்தையும் தவிர்க்க முடியவில்லை.


அரசு தனியார் கல்வி நிறுவனங்களை ஊக்குவிக்கவிரும்பினால்அதனைச்செய்வதில் தவறில்லை. ஆனால், அதற்காக அரச கல்வி நிறுவனங்களை முடக்கி அதனைச் செய்வது ஏற்புடையதாக இருக்காது. அது முற்றுமுழுதாக மக்களால்எதிர்க்கப்படவேண்டியநடவடிக்கையாக இருக்கும். எனவே கல்வி அமைச்சர் இது தொடர்பில்தீவிரகவனம்செலுத்தி.மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படாமல் இருக்க முழுமையான நடவடிக்கைகள் எடுப்பது அவசியம். இல்லாவிட்டால் இலவசக் கல்வி மூலம் நன்மையடைந்த மத்திய தர வர்க்கம் ஆளும் தரப்புக்கு எதிராக மீண்டும் ஒரு தடவை கிளர்ந்தெழுவதைத் தவிர்க்க முடியாது.

# மோடியின் வெற்றியின் பின் இலங்கையின் எதிர்காலம்...?

**மருத்துவர் முரளி வல்லிபுரநாதன்**

இந்தியாவில்மீண்டும்மோடிவெற்றிபெற்றுள்ள நிலையில்இலங்கையைச்சுரண்டும்மோடி-ரணில் திட்டங்கள் மீண்டும் புதிய வேகத்துடன் தொடர இருக்கின்றன. இவற்றுள் தொடர்ந்தும் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடலில் மீன் வளங்களை சுரண்டுவதை தடுக்காமல் இருப்பது மற்றும் மோடியின் சகா அதானியின் நிறுவனத்தினைக் கேள்வி மனுக் கோரல் இல்லாமல் மன்னாரில் காற்றாலைகளை நிர்மாணிக்க அனுமதித்து, எமது நாட்டின் இயற்கை வளத்தினை உபயோகித்துக் குறைந்த செலவில் மின்சாரம் உற்பத்தி செய்ய வழிவகுப்பது, பின்னர் அதானி குழுமத்திடமிருந்தே இலங்கை மக்கள் பாவனைக்கென அதிக விலை கொடுத்து மின்சாரம் கொள்வனவு செய்வது உட்படப் பல திட்டங்கள் அடங்கும்.

இந்த நிலையில் கடந்த வாரம் அதானியின் காற்றாலைத் திட்டத்தைத் தடுத்து நிறுத்தக் கோரி சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் மன்னார் ஆயரும் இணைந்து உச்ச நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தார்கள். சில தினங்களில், இந்த சுரண்டல் திட்டத்தின் இலங்கைப் பங்காளியாகிய ஜனாதிபதி ரணில் மன்னார் ஆயரை ஜுன் 16 சந்தித்து இருக்கிறார்.




இந்தச் சந்திப்புத் தொடர்பாக ஆயர் தெரிவித்த கருத்துக்களைக்கண்ணுற்றபலருக்கும்பின்வரும் ஐய வினாக்கள் எழுவது தவிர்க்க முடியாது.

ஆயரின் காணொளிப் பதிவிலிருந்து ஜனாதிபதி தெரிவித்ததாவது:


1. மன்னாரை ஒரு முக்கிய நகரமாக்குவது.

ஐய வினா 1: அது உண்மை என்றால் கொழும்பு மன்னாரைஇணைக்கும்உயிலங்குளம்பாதையை மூடிவைத்திருப்பதுஏன்?தலைநகரத்துடன்மன்னார் விரைவுவழிப்பாதைவழியாகஇணைக்கப்பட்டால் யாழ் - கொழும்பு போக்குவரத்துப் பிரதானமாக மன்னார் ஊடாக நிகழும். இதனால் மன்னார் முக்கிய நகரமாக அபிவிருத்தி அடையும் என்பதை ஜனாதிபதி அறியமாட்டாரா ?

தமிழர் பகுதியின் ஊடாக போக்குவரத்தும் அபிவிருத்தியும் இடம்பெற்றால் தமிழ்பேசும் மக்கள் மேலெழுந்து விடுவார்கள் என்பதை அறிந்து மேற்குக் கரையோரத்தில் புத்தளம் ஊடான மன்னார் கொழும்பு பாதை மூடி வைக்கப்பட்டுள்ளது.

அதுபோலவே கிழக்குக் கரையோரத்தில்,முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை மாவட்ட எல்லைகளை இணைக்கும் இதய பூமியான மணலாற்றில் மகாவலி அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழர்களது பாரம்பரிய வாழிடங்கள் அபகரிக்கப்பட்டு, பிற இடங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர்.மணலாறு 'வெலிஓயா' ஆகியது.

மட்டக்களப்பிலிருந்து திருகோணமலையின் புல்மோட்டை வரையில் கரையோர வீதி ஊடாகத் தாம்போதிகைளை அமைத்துப் போக்கு வரவினை இலகுவாக்கிய அரசு, அவ்வீதியில் திருகோணமலையின் புல்மோட்டையினையும் முல்லைத் தீவின் கொக்கிளாயினையும் இணைக்கும்துண்டில்மட்டும் பதினைந்து வருடங்களுக்கு மேலாகப் பாலம் எதனையும் அமைக்காது வேண்டுமென்றே விட்டிருக்கிறதுஎனப்பொதுமக்கள் குறிப்பிடுகின்றனர். ( விளக்கப் படங்கள் இணைக்கப்பட்டுள்ளன)




தூரம் அதிகம் உள்ள சுற்றுப்பாதைகள் வழியே சிங்களக் குடியேற்றங்கள் ஊடாகப் பயணத்தை அனுமதித்து முல்லைத்தீவை ஒரு பெரிய நகரமாக்குவதற்கு அரசினர் தடையை ஏற்படுத்தியுள்ளனர் என அவர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

2. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பாதை அமைத்து மின்சாரத்தை பெறுவதும் ஏற்றுமதி செய்வது

ஐய வினா 2: ஏற்கெனவே அதானி குழுவிடம் உலக சந்தை விலையைவிட அதிக விலைக்கு மின்சாரத்தை வாங்க ஒப்பந்தம் செய்தமையானது வெளிப்பட்டு, அதை நீதிமன்றம் விசாரிக்கும் நிலையில்மறுபடியும்'மலிவுவிலையில்மின்சாரம், இந்தியாவுக்கு மின்சார ஏற்றுமதி, என்று எந்த அடிப்படையில் ஜனாதிபதி தெரிவித்தார்?

நாடு இந்தியத் திட்டங்களினால் சுரண்டப்படுவதைத் தடுக்க வேண்டுமானால் ஆட்சி மாற்றம் மிகவும் அவசியம். இந்தியாவின் கூட்டாளிகளைத் தொடர்ந்து ஆட்சியில் வைத்திருப்பதற்காகத் "தற்போதைய ஜனாதிபதி மூலமே நாட்டின் பொருளாதாரம் கட்டியெழுப்பப்படலாம்" என்ற ஒரு மாயை இந்திய முகவர்களினால் ஏற்படுத்தப்பட்டுவருகிறது. அதாவது 5 தடவைபிரதமராகஇருந்துஒருதடவை கூட நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியாமலும், தொடர்ந்து நாட்டின் கடன் சுமையை அதிகரித்துக் கொண்டும்செல்பவரைப்பொருளாதார மீட்பராகச் சித்தரிக்கும் முயற்சிகள் குறித்தமுகவர்களால்நன்குதிட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவேஅரசியல்ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி நிகழ்ச்சி நிரலிற்கு அமைவாக- ரணிலுக்கு எதிரான தமிழர் வாக்குகள் ரணிலின் உண்மையானபோட்டியாளர்களைச் சென்றடையாமல் திசை திருப்பும் ஒரு முயற்சியாகவே தமிழ் பொது வேட்பாளர்என்றசூழ்ச்சித்திட்டம்முன்னெடுக்கப்பட்டு வருவதாகப் பலராலும் நம்பப்படுகிறது.

தமிழ்பொது வேட்பாளரைப் பற்றி பேசுபவர்கள் எல்லாம்நேர்மையாகத்தமிர்களின்விருப்பங்களை நிறைவேற்ற முயற்சிப்பவர்கள் ஆயின், ஏன் இவர்கள் ஒற்றுமையாகத் தமிழர்களுக்கென ஒரு பொதுவான கட்சி மற்றும் சின்னத்தினை உருவாக்கிப் போட்டியிட்டுப் நாடாளுமன்றில் அதிகளவு ஆசனங்களைப் பெற முயலவில்லை ? இதில்இருந்தே இவர்கள் இந்தியாவின் தமிழர்களை பிரித்தாளும் சூழ்ச்சிக்குப் பலியானவர்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாக வெளிப்படுகிறது அல்லவா?

'மத்தியில் ஆட்சி மாற்றம், மாகாணத்தில் தமிழர்களின்பொதுக்கட்சி'என்பதேதமிழர்களுக்கும் நாட்டின் பொருளாதாரத்துக்கும் நன்மை பயக்கும்.

அதுவே வெளிநாட்டுச் சுரண்டல்களில் இருந்து இலங்கையை பாதுகாக்கும் என்பதே நிதர்சனம்.

காலைக்கதிர் Kalaikkathir

# இந்திய முறையிலான அரசியல் தீர்வை முன்வைக்கும் வேட்பாளருக்கு ஆதரவு

## ஆனந்தசங்கரி திட்டவட்டக் கருத்து




இந்திய முறையிலான அரசியல் தீர்வை முன்வைக்கும்வேட்பாளருக்கு ஆதரவளிக்க ஒன்றாக வேண்டும் எனவும், அதற்காக எந்த தரப்புடனும் இணைந்து செயற்பட தயாராக உள்ளதாகவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கிற்கு வந்து 13 ஆம் திருத்தம் தீர்வு என கூறும் போது, தெற்கில் இலங்கை எரியும் என்கிறார்கள். 13 ஆம் திருத்தம், சமஸ்டி எனக் கூறுவதால் தெற்கில் எதிர்ப்புக்கள் அதிகரிக்கும் என்பதை அறியாத அரசியல் தலைவர்களாக உள்ளனர்.

இன்று நாடாளுமன்றத்தில் உள்ளவர்களில் சிலர் தூக்கில் தொங்க வேண்டியவர்களும், சிறைச்சாலையில் இருக்க வேண்டியவர்களுமாக உள்ளனர். முள்ளிவாய்க்காலில் அப்பாவி உயிர்களை காப்பாற்ற வேண்டியவர்கள், இன்று நினைவேந்தல் செய்கின்றனர்.

கடந்த 4 தடவைகளில் நாடாளுமன்றத்தில் இருந்தவர்கள் சட்டவிரோதமானவர்கள். நான் எல்லோரையும் கூறவில்லை.

நாடாளுமன்றம் இறைமையை இழந்து பல ஆண் களாகிவிட்டது. வழக்கு தொடர்ந்தாலும் அதை எதிர்கொள்ள தயாராகவே இதை கூறுகிறேன். நாடாளுமன்றம் இறைமை இழந்துள்ளது. அங்கு இருப்பவர்களில் சிலர் சிறையில் இருக்க வேண்டியவர்கள்.

அரசியலில் அனுபவம் இல்லாதவர்களால் பல சந்தர்ப்பங்கள் கைநழுவிப் போயுள்ளது. தமிழ், சிங்கள அரசியல்வாதிகளில் நான் மூத்த அனுபவம் உள்ள அரசியல்வாதி. இன்று பேசப்படும் அரசியல் தீர்வுகள் தீர்வாகாது.

இந்திய முறையிலான அரசியல் தீர்வே பொருத்தமானது. அந்த தீர்வுத்திட்டம் என்னால் எடுத்துசெல்லப்பட்ட போது ஜனாதிபதி, அமைச்சர்கள், பௌத்த மதத் தலைவர்கள், சிங்கள தலைவர்கள், சிங்கள மக்களும் மற்றும் சர்வேதேசமும் ஏற்றுக்கொண்டது.

என்னைப் பொறுத்த வரையில், அந்த தீர்வுத் திட்டத்தை யாரும் எதிர்க்க மாட்டார்கள். பொருத்தமான தீர்வும் அதுவாக இருக்கும். இன்று முக்கிய காலப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல், இடம்பெறவுள்ளது.

இந்தத் தீர்வுத் திட்டத்தை வெளிப்படையாக அறிவித்து போட்டியிடும் வேட்பாளரை ஒன்றாகச் சேர்ந்து ஆதரிப்போம். அதற்காக எந்த தரப்பாக இருந்தாலும் இணைந்து செயற்படத் தயாராக இருக்கிறேன். மற்றபடி அவர்களின் அரசியல் செயற்பாடுகளுக்கு எனது ஒத்துழைப்பு இருக்காது.

விக்னேஸ்வரன் நீதிபதியாக இருந்த போது பேச வேண்டிய சந்தர்ப்பங்களை விட்டுவிட்டார். நானே அழிவுகளிலிருந்து காப்பாற்ற வாருங்கள் என அழைத்தும் எதுவும் செய்யவில்லை.

அப்போது அமைதியாக இருந்தவர், இன்று ஓய்வூதியத்தை பெற்றுக்கொண்டு ஏதோவெல்லாம் பேசுகிறார். அவர் பேசுவது அரசியலுக்கு இன்று பயனுள்ளதாக இல்லை. அவர் என்னுடைய நண்பராக இருந்தாலும், இதனை சொல்ல வேண்டியதாக உள்ளது.

இன்று பொது வேட்பாளர் என பேசப்படுவது வாக்குச் சிதைவுகளை ஏற்படுத்துமேயன்றி வேறு எதையும் பெற்றுத்தராது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (05 - 113)

# கிண்ணியா முஸ்லிம் மகளிர் கல்லூரி 122ஆவது கல்லூரி தின நிகழ்வுகள்



(எச் எம் ஹலால்தீன்)

கிண்ணியா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் 122 ஆவது கல்லூரி தினம் நேற்று கொண்டாடப்பட்டது.





கல்லூரி அதிபர் தலைமையின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிண்ணியாபிரதேச செயலாளர், கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர். பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், நகர சபை செயலாளர், பாடசாலை ஆசிரியர்கள் உட்பட பலர்கலந்து கொண்டனர்.

அத்துடன் மாணவர்களின் நடைபவணி கல்லூரி வளாகத்தில் ஆரம்பித்து பிரதான வீதியின் ஊடாகச் சென்று மீண்டும் கல்லூரி வளாகத்தை அடைந்தது. (05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு






(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கில் புகழ்பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியில் சிரேஸ்ட மாணவ தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் விழா கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ச.இ. ரெஜினோல்ட்தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது.

விழாவில் பிரதம அதிதியாக முன்னாள் பற்றிமா கல்லூரி அதிபர் அருட்சகோதரர் ஸ்ரிபன் மத்தியூகலந்துசிறப்பித்தார்.

கௌரவ அதிதியாக கல்முனை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ரங்கா சந்ரசேன மற்றும் சிறப்பு அதிதிகளாக முன்னாள் வலயக்கல்விப்பணிப்பாளர் ஆர் .சுகிர்தராஜன் , முன்னாள்பற்றிமாகல்லூரி பிரதி அதிபர் திருமதி பி.திருநாவுக்கரசு,கல்முனை வலய ஆசிரிய ஆலோசகர் ரி.ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

கடந்தவருடம்தெரிவுசெய்யப்பட்டுசிரேஷ்டமாணவத்தலைவர்களாக கடமையாற்றிய மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் கூடவே இடம் பெற்றது.

இவ்வருடத்திற்காக புதிதாக தெரிவு செய்யப்பட்ட சிரேஷ்ட மாணவத்தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

மாணவர் தலைவர்களுக்கான பொறுப்பாசிரியர்கள், மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டார்கள். (05)





# ஊடகவியல்களுக்கான இரண்டு நாள்கள் வதிவிடக் கருத்தரங்கு மட்டக்களப்பில்





(எச் எம் ஹலால்தீன்)

ஜனநாயகபங்குதாரர்களானஊடகவியல்களுக்கான இரண்டு நாள் வதிவிடக் கருத்தரங்கு மட்டக்களப்பு கிரீன் ஹோட்டலில் இடம் பெற்றது.

அகம் மனிதபிமான வள நிலையம் அமைப்பின் இணைப்பாளர்கண்டுமணிலவகுலசூராசாதலைமையில் கீழ் நடைபெற்றது.

இதில் திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மூத்த ஊடகவியலாளர்கள், இளம்ஊடகவியலாளர்கள்கலந்துகொண்டுகொண்டனர்.

ஜனநாயகப் பங்குதாரர்களுக்கான ஓர் அரங்கத்தை உருவாக்குதல் என்னும் செயற்றிட்டத்தில் உள்ளூர் ஊடகவியலாளர்கள், பிரதேசசபைஉறுப்பினர்கள், மக்கள் ஆகிய மூன்று ஜனநாயக பங்குதாரர்களுக்கான ஓர் அரங்கத்தைஉருவாக்கிஅதன்ஊடாகபொறுப்புக்கூறுதல், வெளிப்படைத்தன்மையை நிலைநாட்டுவது தொடர்பாகவும், பிரதேசபை உறுப்பினர்களின் கடமைப் பொறுப்புகள், ஊடகவியலாளர்களின் கடமை பொறுப்புகள், மக்களின் கடமை பொறுப்புகள் என்பன தொடர்பாகவும் தெளிவு படுத்தப்பட்டது. (05)



காலைக்கதிர் Kalaikkathir

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலாம் மணத்திட்டையும் அவர் பார்வையிட்டார்.

இதனையடுத்து இந்திய, இலங்கை எல்லையில் உள்ள இந்தியத் தேசியக் கொடிக்கு மதிப்பளித்ததோடு கடலோரக் காவற்படை அதிகாரிகளுடன் இணைந்து புகைப்படமும் எடுத்துக்கொண்டார்.

இந்தியவெளிவிவகாரஅமைச்சர் ஜெய்சங்கர்இலங்கைபயணத்தினை நிறைவு செய்துகொண்டு மீண்டும் டில்லிதிரும்பி24மணிநேரத்துக்குள் இந்தஆய்வுகள்நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சவூதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிடப்பட்டுள்ளது.

இது தவிர இரு நாடுகளுக்கும் இடையேயான பொருளாதார ஒத்துழைப்பிற்கான புதிய வழிகள் ஏற்படும் என எதிர்பார்க் கப்படுகின்றது. இதேவேளை இந்த ஒப்பந்தத்தினை மேற்கொள் வதற்கான அனுமதி அமைச்சரவையினால் அங்கீ கரிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

## சேதமடைந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

அதேநேரம், பகுதியளவில் சேதமடைந்த வீடுகளை புனரமைப்பதற்காக,இடம்பெற்றுள்ள சேதங்களை மதிப்பீடு செய்து அதிகபட்சவரையறைக்கு உட்பட்டு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சாகல ரத்நாயக்க குறிப்பிட்டார்.

கடந்த சில நாட்களாக நிலவும் சீரற்ற காலநிலையினால் முழுமையாகவும் பகுதியளவிலும் சேதமடைந்த வீடுகளை புனரமைப்பது தொடர்பாக நேற்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில்சாகலரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த சில நாட்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளைப் பாதித்த சீரற்ற காலநிலையினால் ஏற்பட்ட பலத்த காற்று, வெள்ளம் மற்றும் மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களினால் சேதமடைந்த வீடுகளை புனரமைப்பது அல்லது அதிகபட்ச வரையறைக்கு உட்பட்டு தகுந்த இழப்பீடு வழங்குவது தொடர்பாக இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

முற்றிலும் சேதமடைந்த வீடுகளுக்குப் பயனாளிகளின் இணக்கப்பாட்டின் பேரில் அதிகபட்ச வரையறைக்கு உட்பட்டு உரிய இழப்பீடு வழங்குதல் அல்லது முப்படைகளின் பங்களிப்புடன் உடனடியாக வீடுகளைக் நிர்மாணிக்கவும், பகுதியளவில் சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்பதற்காக,இடம்பெற்றுள்ள சேதங்களை மதிப்பீடு செய்து அதிகபட்சவரையறைக்கு உட்பட்டு இழப்பீடு வழங்குவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இயற்கை இடர்களினால் முழுமையாகவும் பகுதியளவும் சேதமடைந்த வீடுகள் தொடர்பில் முறையான அறிக்கையை வழங்குமாறு சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளர்களுக்கு சாகல ரத்நாயக்க மேலும் பணிப்புரை விடுத்தார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன்,முப்படைத்தளபதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட துறைசார் நிறுவனங்களின் தலைவர்கள் இதில் கலந்து கொண்டதுடன், சம்பந்தப்பட்டமாவட்டசெயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் இணையவழி தொழில்நுட்பத்தின் ஊடாக இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# உகந்தை முருகன் ஆடிவேல் திருவிழா உபயகாரர்களுடன் கலந்துரையாடல்





(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற உகந்தைமலை முருகன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் திருவிழாவிற்கான உபயகாரர்களுடனான கலந்துரையாடல் கூட்டம்புதன்கிழமைநடைபெற்றது.

உகந்த மலை முருகன் ஆலய ஆடிவேல்விழாமகோற்சவம்ஜூலை 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் தொடங்கி ஜூலை 22 ஆம் திகதி சமுத்திர தீர்த்தத்துடன் நிறைவடையவிருக்கிறது.

லகுகல பிரதேச செயலக ஏற்பாட்டில் இடம்பெற்ற கூட்டத்தில் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ க.கு. சீதாராம் குருக்களால் திருவிழா சம்பந்தமாகவிளக்கமளிக்கப்பட்டது.

வருடாந்த ஆடிவேல் விழா மகோற்சவம் ஜூலை மாதம் 05 ஆம்திகதிபூர்வாங்ககிரியைகளுடன் ஆரம்பிக்கப்பட்டு 06ஆம் திகதி காலை 11மணியளவில்கொடியேற்ற பூஜை இடம்பெறும். ஆலய வண்ணக்கர் சுதுநிலமே சுதா முன்னிலையில்பிரதமகுருசிவஸ்ரீ சீதாராம் குருக்கள் கொடியை ஏற்றி வைப்பார்கள்.

தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் உற்சவதிருவிழாபூசைகள் இடம்பெற்று இறுதி நாள் 22ஆம் திகதி சமுத்திர தீர்த்தம் இடம் பெறவிருக்கின்றது.

அதனைத் தொடர்ந்து வைரவர் பூசை இடம்பெறும்.

விசேடமாக 12 ஆம் திகதி அன்று காலை கும்பாபி ஷேக தின சங்கபிஷேகம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# கொக்கட்டிச்சோலையில் ஏராளமானோர் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் இணைவு





(வி.ரி. சகாதேவராஜா)

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் கொக்கட்டிச்சோலை பிரதேசத்திலிருந்து ஏராளமானோர் அங்கத்துவம் பெற்று இணைந்து கொண்டார்கள் .

ஐக்கிய மக்கள் சக்தியின் கொக்கட்டிச்சோலை பட்டிப்பளை பிராந்திய உதவி இணைப்பாளரும் முன்னாள்தவிசாளரும்அதிபருமான சிவ. அகிலேஸ்வரன் ஏற்பாட்டில் அவர் முன்னிலையில் புதிய அங்கத்தினர்களை சேர்க்கும் நிகழ்வு இடம் பெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் 20லட்சம்புதிய அங்கத்துவர்களை சேர்க்கும்தேசியவேலைத்திட்டத்தில் ஓரங்கமாக இந்த நிகழ்வு முதலைக் குடாவில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் மாவட்ட பிரசார செயலாளர் வெ.சுதாகரன் , ஊடக செயலாளர் நா.பூவண்ணன், இளைஞர் அணி தலைவர் த.சுதர்சன், நிருவாக செயலாளர் ஜோன் கென்னத் ஆகியோரும் கலந்துசிறப்பித்தனர். இந்தநிகழ்வில் பெருந்திரளான ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். (05)

# சம்மாந்துறை வலய வலைப்பந்தாட்ட சாம்பியனாக நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தி. அணி தெரிவு







*(வி.ரி.சகாதேவராஜா)*

*சம்மாந்துறை வலய வலைப்பந்தாட்ட சம்பியனாக நாவிதன்வெளி அன்னாமலை மகா வித்தியாலய அணி வெற்றி வாகை சூடியது.*

*சம்மாந்துறைவலயமட்ட விளையாட்டு போட்டி நடைபெற்று வருகிறது.*

*அந்த வகையில் வலைப்பந்தாட்ட போட்டி புதன்கிழமை சம்மாந்துறை அல் மல்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.*

*16 வயதுக்குட்பட்ட வலைப்பந்தாட்ட போட்டியில் வீரமுனை ராமகிருஷ்ணா மகா வித்தியாலயம், சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம், சம்மாந்துறைஅல்மல்ஜான்முஸ்லிம்மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலை அணிகளைத் தோற்கடித்து நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலய அணி சாம்பியனாக வெற்றி வாகை சூடியது.*

*சம்மாந்துறை வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நுஸ்ரத் நிலோபரா முன்னிலையில்நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (05)*

# பிரதேச மட்ட சிறுவர் அபிவிருத்தி உள சுகாதாரக் குழுக் கூட்டம்



(சர்ஜுன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச மட்ட சிறுவர் அபிவிருத்தி மற்றும் உள சுகாதார குழுக் கூட்டம் வெள்ளிக்கிழமை உதவி பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சிறுவர்களின் உரிமை மேம்பாடு,பெண்கள் உரிமைகள், சிறுவர் உரிமை மீறல்,உளவளசார் நடவடிக்கைகள் போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் சம்பந்தமாக துறைசார் பிரதிநிதிகளிடம் கலந்தாலோசிக்கப்பட்டது.





இந் நிகழ்வில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் உள நல வைத்திய நிபுணர் டாக்டர் கசூன் கடுவல, நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம் நளீர்,சமூக சேவை பிரிவு பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் திருமதிஏ.யூ.பசீல்,உளவளதுணை உத்தியோகத்தர் கே.தயாளினி, சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களான எம்.ஐ.எம் ஹரீமா, ஏ.ஜே. குறைசா, பொலிஸ்உத்தியோகத் தர்கள், தாதிய உத்தியோகத் தர்கள், பொது சுகாதார அதிகாரி, வலயக் கல்வி பணிமனை உத்தியோகத்தர்கள்எனபலரும் கலந்து கொண்டனர்.

வறுமைக்குட்பட்ட குடும்பங்களில் இரட்டை குழந்தை பெற்றெடுத்தகுடும்பத்திற்குவாழ்வாதார உதவிக்கானகாசோலையும் வழங்கி வைக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# கனேடிய அரசியல் வர்த்தக ஆலோசகருடன் கலாநிதி சிராஸ் மீராசாஹிப் சந்தித்து பேச்சு



(எம்.எப்.றிபாஸ்)

கனேடிய நாட்டின் உயர்ஸ்தானிகர் ஆலயத்தின் அரசியல் மற்றும் வர்த்தக ஆலோசகர் டேனியல் பூட் மற்றும் மெட்றோபொலிடன் கல்லூரியின் தவிசாளரும், ஸ்ரீ.மு. காங்கிரஸின் உயர் பீட உறுப்பினருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு கொழும்பில் இடம்பெற்றது.

இலங்கையின் சமகால அரசியல் பொருளாதார நிலைப்பாடுகள் மற்றும் இருநாடுகளுக்கிடையிலான உயர்கல்வித் திட்டங்கள் பற்றியும் இந் நிகழ்வின் போது விரிவாக ஆராயப்பட்டது. (05)

# சர்வதேச மாணவர் உளவியல் செயலமர்வு யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில்

## ஜூன் 14 நடைபெற்றது







யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி ஒழுங்குபடுத்தலில் ஆசிய - பசுபிக் பாடசாலைகள் உளவியல் அமைப்பு, 30 இற்கும் மேற்பட்ட விரிஸ்ரீவுரையாளர்கள், உளவியல் ஆலோசகர்களின் பங்குபற்றலுடன் ஒருநாள் சர்வதேச உளவியல் செயலமர்வு யாழ் மாவட்டப் பாடசாலைகளை மையமாகவைத்து 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை புனிதபத்திரிசியார்கல்லூரிமத்தியூஸ்மண்டபத்தில் நடைபெற்றது.

ஆசிய - பசுபிக் பாடசாலைகள் உளவியல் அமைப்;பில் மலேசியா, இந்தியா, சிங்கப்பூர், பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளில் இருந்து வருகை தந்த பல்கலைக்கழக உளவியல் பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் இந் நிகழ்வை நெறிப்படுத்தினர்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட குரு முதல்வரும் ஏனைய கல்வி உளவியல் சார் குருக்களும் கலந்து சிறப்பித்தனர்.

யாழ். மாவட்ட பாடசாலைகளில்இருந்துபலநூறு மாணவர்கள் கலந்துகொண்டு பலன் பெற்றதோடு இந் நிகழ்வில் பாடசாலைகளில் உள ஆற்றுப்படுத்தலுக்குப் பொறுப்பான ஆசிரியர்களுக்கு விஷேட விதமாக செயலமர்வு நடத்தப்பட்டு இச்செயலமர்வில் பங்குபற்றியஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பங்குபற்றியமைக்கான சான்றிதழ் வழங்கப்பட்டது.

பாடசாலையில் புத்தகக் கல்வி சுமையாக இருக்கும் உயர்தரப் பிரிவு மாணவர்கள் வாழ்க்கையின் யதார்த்தங்களைப் புரிந்து கொண்டுதம்வாழ்வைசரியான வழியில் நெறிப்படுத்தவும் உள ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் இச் செயலமர்வின் ஊடாக, மாணவர்கள் வழிகாட்டலைப் பெற்றுக் கொண்டனர்.

தற்கால யாழ்.கல்விச் சூழ்நிலையில் இவ்வாறாக மாணவரின் உளவியல் மேம்பாட்டின் செயலமர்வை சர்வதேச ரீதியில் நடத்திய புனித பத்திரிசியார் கல்லூரி சமூகத்தை வலயக் கல்வி அதிகாரிகளும்உளவியல்சமூக ஆர்வலர்களும் பாராட்டினர்.

இந்நிகழ்வில் தமிழக சட்டசபைமுன்னாள்உறுப்பினர் நல்லுசாமியும் ஆசிய பசுபிக் பாடசாலைகள் உளவியல் அமைப்பின்தலைவர்பேராசிரியர்பஞ்சுஇராமலிங்கமும் கலந்து சிறப்பித்தனர். (05)



# சதுப்பு நில மையமாக தியசரு பூங்கா அறிவிப்பு



தியசரு பூங்கா இலங்கையில் சதுப்பு நில மையங்களின் கேந்திர ஈரநில மையமாக அறிவிக்கப் பட்டுள்ளது. தியசரு பூங்காவின் 10ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வியாழக்கிழமை இடம்பெற்ற வைபவத்தில் ரம்சா பிராந்திய நிலையத்திற்கும் தியசரு பூங்காவிற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத் திடப்பட்டது.

இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ரியர் அட்மிரல் பொறியியலாளர் ஹிரான் பாலசூரிய, இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாப னத்தின் இணைப் பணிப்பாளர் பொறியியலாளர் ஸ்ரீமதி சேனாதீர, ரம்சா பிராந்திய மையத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர்சூஷேங் ஹோமற்றும்வைல்ட்பவுல்ட்மற்றும் சதுப்பு நில அமைப்பின் சர்வதேச உறவுகளின்முகாமையாளர்கிறிஸ் ரோஸ்டன் ஆகியோர் இந்த தியசரு பூங்கா புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் இந்த நாட்களில் பத்தரமுல்ல தியசரு பூங்காவில் நடைபெறும் நிஸிஞூபுவிஷ்ழிநுஉளழிஜஷ்ழி மாநாட்டுடன் இணைந்து கைச் சாத்திடப்பட்டது.

டபிள்யூ.எல்.ஐ. ஏசியாஓஸானியா (நிஸிஞூபுவிஷ்ழிநுஉளழிஜஷ்ழி) மாநாட்டில் கலந்து கொண்ட வெளிநாட்டு சதுப்பு நில பிரதிநிதிகள் தியசரு பூங்காவின் 10 ஆண்டு கொண்டாட்டத்தில் பங்கேற்றனர்.

தியசரு பூங்கா 2014 இல் பல்லுயிர் ஆய்வு பூங்காவாக உருவாக்கப்பட்டது. இந்தபூங்காவில் பல்வேறு தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் உள்ளன, இதில் அழிந்து வரும் மற்றும் உள்ளூர் இனங்கள் அடங்கும். இது பறவைகளை பார்ப்பதற்கு ஒரு பிரபலமான இடமாகும், 80 க்கும் மேற்பட்ட சதுப்பு நில பறவைகள் உள்ளன.

15வகையானஉள்ளூர்மீன்கள், 40 வகையான வண்ணத்துப் பூச்சிகள், 28 வகையான அரிசி வண்டுகள், 28வகையானஊர்வன மற்றும் 7 வகையான பாலூட்டிகள் இந்த பூங்கா கண்காணிப்பில் அடையாளம்காணமுடியும். அழிந்து வரும்5நகர்ப்புறசிறுத்தைகளையும் இந்த பூங்காவில் காணலாம்.

அத்துடன், சர்வதேச சதுப்பு நில பூங்கா ஒன்றியத்தின் அவுஸ் திரேலியா, நியூசிலாந்து மற்றும் ஆசியமுதலாவதுமாநாட்டில்கலந்து கொண்ட பிரதிநிதிகள் நேற்று (19) பெத்தகான சதுப்பு நில பூங்காவில் கண்காணிப்பு விஜயமொன்றில் ஈடுபட்டதுடன், பெத்தகானசதுப்புநில பூங்காவிற்கு தமது பாராட்டுக்களை தெரிவித்தனர். சதுப்பு நிலங்களை பாதுகாக்க இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் அவர்கள் பாராட்டு தெரிவித்தனர்.

கொழும்பு பெருநகர சதுப்பு நில முகாமைத்துவ மூலோபாயத் திட்டத்தின் கீழ் 2015 இல் பெத்தகான சதுப்புநிலம் உருவாக்கப்பட்டது. 20 ஏக்கர் பரப்பளவுள்ள பெத்தகான சதுப்பு நிலம் 2016 ஆம் ஆண்டு 'நீர்வாழ் தாவரங்கள் மற்றும் விலங்குகளைப்பாதுகாத்துமீண்டும் பயன்பாட்டிற்கு கொண்டு வருதல்' என்றகருத்தின்கீழ்பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டது.

கொழும்பின் வெள்ளத்தை கட்டுப்படுத்துவதில்பெத்தகானசதுப்பு நிலம் சிறப்புப் பங்கு வகிக்கிறது. பல்லுயிர்வளம்கொண்டபெத்தகான சதுப்பு நில பூங்காவில் சுமார் 300க்கும்மேற்பட்டதாவரவகைகள் உள்ளன. அங்கு கிட்டத்தட்ட 75 பறவைகள் வாழ்கின்றன. நீர்வீழ்ச்சிகளில் சுமார் 8 வகைகள் உள்ளன. 35 வகையான மீன்கள், 30 வகையான ஊர்வன, 20 வகையான பாலூட்டிகள், 55 வகையான பல்லிகள் மற்றும் கிட்டத்தட்ட 35 வகையானதுமபிகள் ஆகியவற்றைக் காணலாம்.

நகர அபிவிருத்தி அதிகார சபை, காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், புவிசார் மற்றும் கட்டிடக்கலைஞர்கள்மற்றும்சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் இணைந்து உருவாக்கியபெத்தகானசதுப்புநிலப் பூங்கா தற்போது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச் சின் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கட்டுப்பாட்டில் உள்ளது. (05)

# சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்



(கே எ ஹமீட்)

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணையைச்சேர்ந்தசமூகசெயற் பாட்டாளரான வடிவேல் கார்த்திக் கடந்த 13 ஆம் திகதி கல்முனை மேலதிகமாவட்டநீதிபதிஎம்.எஸ்.எம். சம்சுதீன் முன்னிலையில் தீவு முழுவதற்குமான (அகில இலங்கை) சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் கலைப்பட்டதாரியும், இந்து தர்மாசிரியருமான இவர் அண்மையில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கான கிராம உத்தியோகத்தராகவும் நியமனம் பெற்றுள்ளார்.

பெரியநீலாவணை விஷ்ணு மகா வித்தியாலயத்தின் பழைய மாணவராகிய இவர் பெரியநீலா வணை வடிவேல் - விஜயலட்சுமி தம்பதிகளின்சிரேஷ்டபுத்திரர்என்பது குறிப்பிடத்தக்கதாகும். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# வவுனியாவில் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட பெறுமதியான மரங்கள் பொலிஸால் மீட்பு

## ஒருவர் கைது



வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் விற்பனைக்காக சட்டவிரோதமாக வெட்டப்பட்டு வைத்திருந்த 20 லட்சத்திற்கும் மேற்பட்ட பெறுமதியான மரங்கள் மீட்கப்பட்டதுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் சாமந்த விஜயசேகரவுக்குக்கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மாலின் அஜந்த பெரேராவின் உத்தரவின் பேரில், மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதர் அழகியவண்ணவின் தலைமையில் பொலிஸ் பரிசோதகர் கஜேந்திரன், பொலிஸ் சார்ஜன்டுகளான ரன்வெல , சிசிர, பொலிஸ் கொன்ஸ்தாபிள்களான வீரசேன, ஹேரத் , சுப்புன் , சனத் , குமார , நாமல் மற்றும் சாரதியான திசாநாயக்க ஆகியோர் அடங்கிய மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர், உடனடியாக செயல்பட்டு குறித்த மரங்களை மீட்டதுடன், அதனை உடைமையில் வைத்திருந்த அப் பகுதியை சேர்ந்த 30 வயதுடைய சந்தேக நபரையும் கைதுசெய்திருந்தனர்.

மீட்கப்பட்ட மரங்கள் சுமார் 20 லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியானது எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



இதேவேளை மீட்கப்பட்ட மரங்களையும் சந்தேக நபரையும் வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05 - 100)

# காதி நீதிவான்களுக்கான கொடுப்பனவு அதிகரிப்பு!

(சலீம்)

நாடெங்கிலும் சேவையில் ஈடுபட்டுள்ளகாதிநீதிவான்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு அதிகரிப்பு 2025ஆம்ஆண்டின்வரவுசெலவுத் திட்டத்தில்உள்வாங்கப்படவுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்,நாடாளுமன்றஉறுப்பினர் ரவூப் ஹக்கீமுக்கு நீதி அமைச்சின் செயலாளர் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட மேல் நீதிமன்ற வலயங்களுக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்தின் பிரகாரம், முஸ்லிம்களின் விவாகப் பிணக்குகளை விசாரித்து தீர்வுகளையும், தீர்ப்புகளையும் வழங்குவதற்கென நீதிச் சேவை ஆணைக்குழுவால்காதிநீதிவான்கள் நியமிக்கப்பட்டுள்ளதோடு, அவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவாக பதினைந்தாயிரத்துக்கும் குறைவாகவே வழங்கப்பட்டு வருகின்றது.

ஜூரி(நடுவர்) கள் மற்றும் விவாக பிணக்குகள் சம்பந்தமாக சமரசம் செய்துவைக்கும் ஆலோசகர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இது பகுதிநேரப் பணியாக மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் கூட, வாரந்தோறும் இதற்கான வெள;வேறுவிதமான விண்ணப்பங்களையும், முறைப்பாடுகளையும்பொறுப்புணர்ச்சியுடன் பலநாள்கள்அலசிஆராய்ந்துமிகவும் அர்ப்பணிப்புடன்செயலாற்றும்காதி நீதிவான்களுக்கு இதுகால வரை வழங்கப்பட்டுவரும் கொடுப்பனவு எவ்விதத்திலும் போதுமானதல்ல என்பதால், அவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவை தற்போது வழங்கப்படுகின்ற தொகையை விடவும் மூன்று மடங்குகளாக அதிகரித்து வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் நீதி, சிறைச்சாலை மற்றும் அரசமைப்பு மறு சீரமைப்பு அமைச்சுக்குக் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதற்கமைவாகவே நீதியமைச்சின் செயலாளரால் பிரஸ்தாப காதி நீதிவான்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவுகள் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டு, அதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும்,காதிநீதிவான்களுக்கான கொடுப்பனவுகளை அதிகரித்து வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளைத் தொடர்புகொண்டுஉரிய நடவடிக்கைஎடுக்குமாறு இலங்கை காதி நீதிவான்கள் அமைப்பின் தலைவரும், இரத்தினபுரி மாவட்ட காதி நீதிவானுமான இப்ஹாம் யஹியா, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமின் கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தார். (05)

# மனைவியை எரித்துக் கொன்ற கணவனுக்கு தூக்கு தண்டனை

யாழ்ப்பாணத்தில் மனைவியை தீ மூட்டி எரித்து படுகொலைசெய்தகணவனுக்குயாழ். மேல்நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20ஆம் திகதி மானிப்பாய் காக்கை தீவு பகுதியில் குடும்ப பெண்ணொருவர் தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம்தொடர்பில்விசாரணைகளைமுன்னெடுத்த மானிப்பாய் பொலிஸார் கணவனை கைது செய்து யாழ். நீதிவன் நீதிமன்றில் முற்படுத்தினர்.

நீதிவான் நீதிமன்றில் சுருக்கமுறையற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, 2019ஆம் ஆண்டு யாழ். மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் குற்றப்பகிர்வு பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

விசாரணைகள் முடிவடைந்த நிலையில், புதன்கிழமை வழக்கு தீர்ப்புக்காக திகதியிடப்பட்டது.

தீர்ப்புக்காக புதன்கிழமை வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவனை மன்று குற்றவாளியாக கண்டு, மரண தண்டனை விதிக்கப்பட்டது. (05)

# சாரதியின்றி ஓடிய ஓட்டோ கால்வாயில் வீழ்ந்து விபத்து

## நால்வர் காயம்

பதுளை - மஹியங்கனை பிரதான வீதியில் மீகஹகிவுல பிரதேசத்தில் ஓட்டோ ஒன்று கால்வாயில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் நான்கு பேர் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்து வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

மீகஹகிவுலயிலிருந்து பொல்க ஹராவ நோக்கிப் பயணித்த ஓட்டோ ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஓட்டோவின் சாரதி தனிப்பட்ட தேவைக்காகக் கடை ஒன்றிற்கு அருகில் ஓட்டோவை நிறுத்தி விட்டு வெளியே இறங்கிச் சென்றுள்ளார்.

இதன்போது, இந்த ஓட்டோ சாரதியின்றி நகர்ந்து சென்று 30 அடி ஆழமுடைய கால்வாயொன்றில் வீழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் ஓட்டோவில் இருந்த மூன்று பெண்கள் உட்பட நான்கு பேர் காயமடைந்துள்ள நிலையில் மீகஹகிவுல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# ஜனாதிபதியின் மன்னார் பயணத்தால் மக்களுக்கு எந்தவிதப் பயனும் இல்லை

## தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் குற்றச்சாட்டு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மன்னார் விஜயத்தால் மக்களுக்கு எவ்வித பயனும் இல்லை. காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மண் அகழ்வு குறித்து எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. அரசியல் நலன் சார்ந்தே இந்த விஜயம் அமைந்துள்ளது என தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்தியப் பிரதமரின் இலங்கை வருகையை ஒட்டி தனது அரசியல் இ ருப்பை நிலைநிறுத்திக்கொள்ளும் விவகாரத்துக்காக மன்னாருக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

காற்றாலைஉற்பத்தியைஇந்தியாவுக்குவழங்குகின்ற விவகாரம் தொடர்பாகவும் தலைமன்னாரில் இருந்து இராமேஸ்வரத்துக்கான தரைவழிப் பாதை அமைப்பது சம்பந்தமாகவும் உரையாடிச் சென்றுள்ளார்.

அவருடைய வருகை அரசியல் ரீதியாக நிறைவேறி இருந்தாலும் மன்னார் மக்களுக்கு எவ்வித பலனும் கிடைத்ததாகத் தெரியவில்லை. இங்குள்ள காணி விடுவிப்பு குறித்து எந்தவித முயற்சிகளும் எடுக்கப்படவில்லை.

கலந்துகொண்டிருந்தவன்னிமாவட்டநாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட இவ்விடயத்தை வலிமையாக வலியுறுத்தவும் இல்லை. அவர்களும் ஆளும் கட்சி போல் ஜனாதிபதியின் நிகழ்வில் ஆசுவாசமாகக் கலந்துகொண்டு சென்றுள்ளனர்.

மன்னாரில் இனி புதிதாகக் குடியேறுவதற்கு எவ்வித காணியும் இல்லை.

வன இலாகா மற்றும் பறவைகள் சரணாலயம் என்ற போர்வையில் காடுகளைப் பாதுகாத்தல், விலங்குகளைப் பாதுகாத்தல், கரையோரத்தைப் பாதுகாத்தல் என்ற போர்வையில் சகல இடங்களையும் வர்த்தமானிக்கு உட்படுத்தப்பட்டு, மன்னாரில் மக்கள் குடியேறாத வகையில் ஒரு துண்டு நிலம் இல்லாத நிலையில் உத்தரவாதத்தை அரசு மீறி விட்டது எனத் தெரிவித்தார்.(05)

# கார் மோதியதில் பெண் கல்கிஸ்ஸையில் இறப்பு

கல்கிஸ்ஸை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கார் மோதி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாககல்கிஸ்ஸை பொலிஸார் தெரிவித் தனர்.

இந்த விபத்து புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

கல்கிஸ்ஸை பிரதேசத்தைச் சேர்ந்த 70 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந் துள்ளார்.

மொரட்டுவையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த கார் ஒன்று வீதியில் பயணித்த பாதசாரி பெண் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது, பாதசாரி பெண் படுகாயமடைந்துள்ள நிலையில் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரது சடலம் களுபோவில வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிஸ்ஸை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# தேர்தல் செலவீனத்தை ஒழுங்குபடுத்துதல் சட்ட தெளிவூட்டல் கருத்தரங்கு வடமாகாண ரீதியில்




2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தேர்தல் செலவீனத்தை ஒழுங்கு படுத்தும் சட்டம் தொடர்பாக வடமாகாணரீதியிலான தெளிவூட்டல் கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்கா தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலகமாநாட்டு மண்டபத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் தேர்தல் ஆணைக்குழுவின் உயரதிகாரிகள்,மேலதிக அரசாங்கதிபர்கள் , ஐந்து மாவட்டங்களின் உதவித்தேர்தல் ஆணையாளர்கள், மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ,தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களைச் சேர்ந்தோர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தேர்தல் தொடர்பாக ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்திருந்தார். தாம் தேர்தலுக்கு எப்போதும் தயார் எனவும் அரசமைப்பின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற நிலையில் தற்போது ஜனாதிபதி தேர்தல் நடத்த வேண்டும் எனவும் தெரிவித்தார். (05-113)

# ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு நாபீர் பௌண்டேசன் கிரிக்கெட்




(எம்.ஏ.றமீஸ்)

புனித ஹஜ்ஜுப் பொருநாளை முன்னிட்டு சாய்ந்தமரு பிளாஸ்டர் விளையாட்டுக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் கடின பந்து 'நாபீர் பௌண்டேசன் சம்பியன் கிண்ணத்திற்கான கிறிக்கற் சுற்றுப் போட்டி சாய்ந்தமருது பொலிவேரியன் பொது விளையாட்டு மைதானத்தில்; இடம்பெற்றது.

நாபீர் பௌண்டேஷனின் பூரண அனுசரணையில் அணிக்கு 11 வீரர்களைக் கொண்டு மட்டுப் படுத்தப்பட்ட 10 ஓவர்களைக் கொண்டதாக இச்சுற்றுப் போட்டி இடம்பெற்றது. இச்சுற்றுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வு வியாழக்கிழமை மாலை இடம்பெற்றது. இச்சுற்றுப் போட்டியின் சம்பியனாக சாய்ந்தமருது பிளாஸ்டர் அணியினர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த நிகழ்வின்போது நாபீர் பவுண்டேஷன் ஸ்தாபக தலைவரும் பொறியியலாளருமான கலாநிதி உதுமாண்கண்டுநாபீர்பிரதமஅதிதியாககலந்துகொண்டு வெற்றிக்கிண்ணத்தையும்பணப்பரிசுகளையும்வழங்கி வைத்தார். இதன்போது கலாநிதி உதுமான்கண்டு நாபீரின் மக்கள் நல உன்னத சேவையைப் பாராட்டி சிறப்பு விருதும் வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம அதிதி பொறியியலாளர் கலாநிதி நாபீர் உள்ளிட்ட அதிதிகளுக்கும் விளையாட்டு வீரர்களுக்கும் மைதானத்தை அண்டிய வீதியிலிருந்துமைதானம்வரைபிரமாண்டனான வரவேற்பு அளிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர்.

இச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிக்கு கல்முனை ஜீனியர்ஸ் விளையாட்டுக் கழகமும், சாய்ந்தமருது பிளாஸ்டர்விளையாட்டுக்கழகமும் தெரிவுசெய்யப்பட்டிருந்தன. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கல்முனை ஜீனியர்ஸ் அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடி 9 விக்கற்றுக்களை இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.

இதன்போது கல்முனை ஜீனியர்ஸ் அணியின் வீரர் ஏ.அப்காம் தனது அணிக்காக அதிக பட்சமாக 24 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். கல்முனை பிளாஸ்டர் அணியின் பந்து வீச்சாளரான எம்.மபாஸ் 10 ஓட்டங்களுக்கு மூன்று விக்கற்றுக்களை வீழ்த்தியிருந்தார்.

73 வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது பிளாஸ்டர் அணியினர் நிர்ணயிக்கப்பட்ட வெற்றி இலக்கை 8.5 ஓவர்களில் 4



விக்கற்றுகளை மாத்திரம் இழந்து 6 விக்கற்றுகளால் வெற்றி பெற்றனர்.

சுஜய்ந்தமருது பிளாஸ்டர் அணி சார்பாக எம்.ஆபாக் 26 ஓட்டங்களையும், எம்.சஹீன் 24 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

இதன்போது நாபீர் பௌஷ்டேசன் தலைவரும், பொறியியலாளருமான கலாநிதி உதுமாண்கண்டு நாபீர் தனது சொந்த நிதி மூலம் சுற்றுப் போட்டியில் முதலிடம் பெற்ற சாய்ந்தமருது பிளாஸ்டர் அணியினருக்கு ஐம்பதாயிரம் பணப் பரிசும் பெறுமதி மிக்க வெற்றிக் கிண்ணமும் வழங்கி வைத்தார். இதேவேளை இரண்டாமிடம் பெற்ற கல்முனை ஜீனியர்ஸ் அணியினருக்கு 25 ஆயிரம் ரூபா பணப் பரிசினையும் வழங்கி வைத்தார். (05)

# நெல்லிக்குளம் மலை உடைப்பு வழக்கு ஜூலை 4க்கு நீதிமன்றால் ஒத்திவைப்பு



(ஹஸ்பர் ஏ.எச்)

மூதூர்கிழக்குசேனையூர்கிராம சேவகர்பிரிவுக்குட்பட்டநெல்லிக்குள மலை பிரதேசத்தில் மலை உடைப்பதால்தமக்குபாதிப்புள்ளதாக கல்மலைஉடைக்கும்போதுஎதிர்ப்பு தெரிவித்த 10 பொதுமக்கள் 11.06



2024 அன்று சம்பூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு 12 ஆம் திகதி மூதூர் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து அவர்கள் அனைவரும் சொந்தப் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்கள்.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்தை மூதூர் நீதிவான் நீதிமன்ற நீதிபதி தஸ்னீம் பௌசான் சனிக்கிழமை அன்று விஜயம் செய்து பார்வையிட்டதுடன் குறித்த வழக்கு வியாழக்கிழமை மூதூர் நீதிமன்றில்நீதிமன்றபதில்நீதிவான் முன்னிலையில் விசாரனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இது தொடர்பான வழக்கை மூதூர்நீதிமன்றில்சம்பூர் பொலிஸார் முன்னர் தாக்கல் செய்திருந்தனர். குறித்த வழக்கில் இரு தரப்பினரும் வியாழக்கிழமை ஆஜராகியிருந்தனர். கைது செய்யப்பட்டு சொந்த பிணையில் விடுவிக்கப்பட்ட 10 நபர்களுக்கும் சார்பாக சட்டத்தரணிகளான முகுந்தன், நா.மோகன், சிரேஷ்ட சட்டத்தரணி டாக்டர் தங்கமுத்து ஜயசிங்கம் ஆகியவர்கள் ஆஜராகி யிருந்தனர்.

மேற்படிவழக்கானதுஎதிர்வரும் 2024.07.04 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மூதூர் நீதிமன்றபதில்நீதிவானால்மன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# ஓட்டோ - மோ. சைக்கிள் விபத்தில் இருவர் காயம்



கொட்டாவை - கல்கிஸ்ஸை வீதியில் மிரிஸ்வத்த சந்திக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

ஓட்டோ ஒன்று மோட்டார் சைக்கிள் ஒன்றுடன்மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது இருவர் படுகாய மடைந்துள்ள நிலையில் பிலியந்தலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.(05)

# அகோர மாரியம்மன் ஆலயத்தில் தீ மிதிப்பு





(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற சம்மாந்துறை தமிழ்ப்பிரிவு கோரக்கோயில் ஸ்ரீஅகோர மாரியம்மன் ஆலய வருடாந்த தீமிதிப்பு சடங்கு வெள்ளிக்கிழமை காலை சிறப்பாக நடைபெற்றது.

சுமார் ஆயிரம் பக்தர்கள் தீமிதிப்பில் கலந்துகொண்டனர். ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ சிறப்பாக நடைபெற்றது.

ஆலயத்தின் தீமிதிப்பு சடங்கு கடல் நீர் எடுத்து வந்து திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து ஒன்பது நாள்கள் திருவிழாக்கள் இடம்பெற்று பத்தாம் நாள் நேற்று 21 ஆம் திகதி தீ மிதிப்பு சடங்கு நடைபெற்றது.

ஆலய பிரதம பூசகர் முருகேசு ஜெகநாதன்தலைமையில்சடங்குகள் இடம்பெற்றுவந்தன. (05)









காலைக்கதிர்
Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.06.2024இல் வெளியிடப்பெற்றது